02.04.2026 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 184 /2018 ) திரு.முருகன்.

2 ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை–

1) வழக்கு எந்த சொத்திற்காக வழக்கு போட்டுள்ளேன் எந்த சர்வே எண்ணிற்கு, அதன் விஸ்தீரணம் என்னவென்றால் சர்வே எண். தெரியவில்லை. நான்கு மால்கள். ஓடைக்கு மேற்கு, பொது இடத்திற்கும் தெற்கு, கிழமேல் தெருவுக்கும் மேற்கு, தென்வடல் தெருவிற்கும் வடக்கு. நான் சொல்லும் மால் விவரம் பிராது 1 வது தபசில் சொத்திற்குரியதா அல்லது 2 ம்தபசில் சொத்திற்குரியதா என்றால் 1,2 தபசில் சொத்திற்குரிய எல்கை மால்கள் ஆகும். என்னிடம் காட்டப்படும் பிராதில் 1 வது தபசில் சொத்திற்கு ஒருவிதமான நான்கு மால்களும், 2 ம்தபசில் சொத்திற்கு ஒருவிதமான நான்கு மால்களும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 1 ம்தபசில் சொத்திற்குரிய நான்கு மால்கள் விவரம்சரிதான். 2 ம்தபசில் சொத்திற்குரிய காலிமனைக்கு நான்கு மால்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 ம்தபசில் சொத்தை பொறுத்து திருமதி.கனகம்மாள் இந்நீதிமன்றத்தில் எனக்கு எதிராக வழக்கு அ.வ.எண்.222/2018 தாக்கல் செய்து அந்த வழக்கு நிருவையில் உள்ளது என்றால் தெரியாது. அ.வ.எண்.222/2018 வழக்கும் இந்த வழக்கும் ஒரே தபசில் சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு என்பதால் ஒரே கால கட்டத்தில் (Symaltaneously) வழக்கு நடத்துவதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. 1 வது தபசில் வீட்டின் கதவு எண் என்னவென்றால் தெரியாது. 2 வீடுகள் அடுத்த அடுத்த வீடாக சேர்ந்து உள்ளது என்றால் சரிதான். இரண்டு வீட்டிற்குரிய கதவு எண்ணும் தெரியாது என்றால் சரிதான். 1 வது தபசில் சொத்தில் உள்ள 2 வீடுகள் முதலில் யாருக்குப் பாத்தியப்பட்டது என்றால் காளிமுத்து, மாடசாமிக்குப் பாத்தியப்பட்டது. நான் யாரிடமிருந்து வீட்டை வாங்கினேன் என்றால் எனது உடன்பிறந்த தம்பியிடமிருந்து வாங்கினேன். எனது தம்பி சண்முகராஜ் யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் காளிமுத்து, மாடசாமியிடமிருந்து கிரையம் பெற்றார். தற்போது காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 கிரையப்பத்திரம் 4 நபர்களிடமிருந்து கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் அவர்களின் வாரிசுகளிடமிருந்து கிரையம் பெறப்பட்டுள்ளது.

2) மேற்படி மாடசாமிக்கும், காளிமுத்துக்கும் தனித்தனியாக பட்டா உண்டு என்றால் தெரியாது. ஒவ்வொரு வீட்டின் பரப்பளவு எவ்வளவு என்றுதெரியுமா என்றால் 16 x10 ஒரு வீடும் 16x 10 மற்றொரு வீடும் ஒவ்வொரு வீடும் 160 சதுரஅடி கொண்ட

வீடுகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் 1ம்தபசில் சொத்தின் விஸ்தீரணம் கிழமேல் 75அடி, தென்வடல் 29 மொத்த சதுர அடி 2175சதுரஅடி என்றால் சரிதான்.1வது தபசில் சொத்தின் 16 x10 சரியான அளவு என்றால் வீட்டுஅளவு. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வீட்டின் அளவை தனியாக பிரித்து காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். காளிமுத்து, மாடசாமியின் 1ம் தபசில் சொத்துக்குரிய முன் ஆவணங்கள் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. வழக்கு சொத்தான வீட்டின் வாசல் எந்தப்பக்கம் பார்த்து உள்ளது என்றால் ஒரு வாசல் தெற்கே பார்த்தும், ஒரு வாசல் கிழக்கு பார்த்தும் உள்ளது. தெற்கே பார்த்துள்ள வாசல் உள்ள வீட்டிற்கு கிழமேல் பாதை உள்ளது என்றால் சரிதான். கிழமேல் பாதைக்கு தெற்கே தான் பிரதிவாதி கனகம்மாள் வீடு உள்ளது என்றால் சரிதான். கனகம்மாள்ளின் வீட்டு வாசல் வடக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான் கிழமேல் தெருவை பார்த்துள்ளது. கிழமேல் தெருவின் நேர் வடக்கே 2ம்தபசில் சொத்து உள்ளது என்றால் சரிதான். 2ம்தபசில் சொத்தை கனகம்மாள் 40 ஆண்டுகாலமாக புழங்கிக்கொண்டு வந்தார் என்றால் தவறு. 2ம்தபசில் சொத்தில் கனகம்மாள் மரங்கள், மாட்டுத்தொழுவம் வைத்து தற்போது வரை புழங்கிவருகிறார் என்றால் இல்லை. காளிமுத்து,மாடசாமி ஆகியோர்களிடமிருந்து எனது தம்பி கிரையம் பெற்றதாக சொல்லுவதில் மாடசாமி,காளிமுத்துக்கு பட்டாப்படி தலா 32 சதுர மீட்டர், ஒவ்வொரு வீடும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதற்கு மேற்கே காளிமுத்து,மாடசாமிக்கு இடம் கிடையாது என்றால் சரிதான். எனது தம்பி வா.சா.ஆ.1 ஆவணத்தில் காளிமுத்து, மாடசாமிக்கு பாத்தியப்பட்ட வீட்டின் அளவை விட அதிகமாக போட்டு கனகம்மாள் இடத்தையும் சேர்த்து சண்முகராஜ் பெயரில் கிரைய ஆவணம்ப திவு செய்துள்ளார் என்றால் மூலப்பத்திரமே 5 செண்டுக்குள்ளது.

3) நான் சொல்லும் 5 செண்டுக்குரிய மூலப்பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அனுபவப்பாத்தியதை தான். தொழுவு, மரம் உள்ளது. நான் எனது தம்பி சண்முகராஜிடமிருந்து எப்போது கிரையம் பெற்றேன் என்றால் 2017ல் கிரையம் பெற்றேன். 2015ஆம் ஆண்டு எனது தம்பியிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்லுவது தவறு என்றால் சாட்சி மீண்டும் 2015ல் தான் கிரையம் பெற்றதாக கூறுகிறார். நான் கிரையம் பெற்றதும் வா.சா.ஆ.2 ஆவணம் வா.சா.ஆ.1ன் அளவுகளை காண்பித்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். தாவாச்சொத்துக்கு

மேல்பக்கம் உள்ள 2ம்தபசில் காலியிடம் எந்தக்காலத்திலும் எனக்கோ எனது முன்பாத்தியஸ்தரான காளிமுத்து,மாடசாமிக்கு எந்தக்காலத்திலும் அனுபவத்தில் இருந்து வரவில்லை என்றால் சரியல்ல. காளிமுத்து, மாடசாமிக்கும் கழுதை வைத்திருந்திருந்து வெள்ளாவி வைத்து அனுபவம் உள்ளது. நான் சொல்லுவது போன்று கழுதை வைத்து வெள்ளாவி வைப்பதற்கு ஆவணம்உள்ளதா என்றால் இல்லை. 2ம்தபசில் சொத்து நத்தம் புறம்போக்கு என்றால் சரிதான். தற்போது வரை நத்தம் புறம்போக்காகத்தான் இருந்துவருகிறது என்றால் சரிதான். 2ம்தபசில் சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும், அனுபவப்பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு தவறானது என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
02.04.2026.